

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகரத்தில் பாஜகவினர் திமுகவில் இணையும் நிகழ்ச்சி திமுக நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் பாஜக மாநில செயற்குழு உறுப்பினரும் ஆர்.எஸ்.எஸ்.ஜெய் பாரத் மன்ச் என்ற அமைப்பின் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத் தலைவருமான பாரதிராஜா உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் மற்றும் பெண்கள் 500 பேர் திமுகவில் இணைந்தனர்கள். உடன் பிரபு கஜேந்திரன், எஸ்.சங்கர், சன். பிரகாஷ், ஜெ.சரவணன், இ.செல்லதுரை , எம்.காந்தி, பு.பரிசமுத்து, சத்தியகிரி, இளங்கோவன், என்.ராஜ், அப்பு(எ) ஜெபராஜ், ஆ. நாராயணன், நரேஷ், குடியரசு உள்பட பலர் உள்ளனர்.



அமெரிக்க அயலக அணி தெற்கு மண்டலத்தின் ஏற்பாட்டில், கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் வீ.கண்ணதாசன். மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி மற்றும் மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் தமிழ்நாடு முழுநேர உறுப்பினர் அ.முகமது ஜியாவுதீன் ஆகியோர் கலந்துகொண்டு, அயலக வாழ் தமிழ் மக்களுடன் கலந்துரையாடினர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 235 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,அக்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்க ரங்கள்" மாபெரும் திட்டத்தின் 235 ஆம் நாளான - கழகத்த லைவர் தமிழ்நாடு முதலமை ச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (12.10.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 98அ, குட்டியப்பன் முதல் தெரு, அனல்யா மருத்துவமனை. 2) வட்டம் 98அ, ராமநாதன் தெரு, பெருமாள் கோயில் அருகில், அயன்புரம், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களை யும், எதிர்காலத்தை யும் யாரு க்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நா ட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமி ழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதும க்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதாவாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ. விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாள், க. சுகுமாரன், மா. அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்..முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் கொண்டுவரப்பட்ட

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்து விட்டது!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

புதுடெல்லி,அக்.13-

டெல்லியில் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், 20 ஆண்டுகளுக்கு முன்பு 2005 ஆம் ஆண்டு இதே நாளில் கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்து விட்டதாக குற்றம் சாட்டினார். இதே போன்று, கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், அனைவருக்கும் கல்வி சட்டம் ஆகியவற்றையும் மோடி அரசு முறையாக செயல்படுத்தாமல் உள்ளதாக புகார் தெரிவித்தார். தகவல் அறியும் சட்டம் தொடர்பாக தாம் தொடர்ந்த வழக்கு 7 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வராமல் உள்ளதாக கூறிய ஜெய்ராம் ரமேஷ், தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையர் பதவி தொடர்ந்து காலியாக கிடப்பதன் மூலம், பல லட்சம் மனுக்கள் தேங்கி கிடக்கிறது என்று புகார் கூறினார். தற்போது தனி நபர் தரவுகள் பாதுகாப்பு என்று கூறி மேலும் தகவல் உரிமை சட்டத்தை ஒன்றிய அரசு முடக்கி உள்ளதாகவும், தரவுகள் பாதுகாப்பு சட்டத்தை கடந்த ஆகஸ்ட் மாதம் அமல்படுத்தியது மூலம், முதல் முழுமையாக தகவல் உரிமை சட்டத்துக்கு ஒன்றிய அரசு மூடுவிழா நடத்திவிட்டதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டினார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் –ஜெ.அருண் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அறிக்கை!

சென்னை, அக். 13

மாதவரம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (13.10.2025 திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் மாதாவரம், 19 வது வட்டம், மாத்தூர் எம்.எம்.டி.ஏ, 2 வது பிரதான சாலையில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.ஆருண், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி, மாநில, மாவட்ட நிர்வாகிகள், இன்னாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாதவரம் வடக்குப் பகுதி நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், (BOOTH COORDINATORS), BLA2, BLC, BDA, BYA அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாதவரம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மு.க.தமிழரசு, நே.சிற்றரசு, தயாநிதி மாறன், அன்பகம் கலை, எழிலன் நாகநாதன், சைதை சாதிக் பங்கேற்பு!

# 109 வது வட்ட பாக பொறுப்பாளர்கள் - பாகத் தலைவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம்!

## ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, அக்.13-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109 வது வட்டம் பாக பொறுப்பாளர்கள் மற்றும் பாகத் தலைவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம் இன்று (13.10.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணிக்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

இக்கூட்டத்தில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணைய அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

எனவே வட்ட கழக செயலாளர் மற்றும் 109 வது வட்டத்துக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.

### கலாநிதி வீராசாமி- கே. பி.சங்கர் –எஸ்.மோகன் பங்கேற்பு!

# திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டம் !

## மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரை! வை.ம.அருள்தாசன் அறிக்கை!

சென்னை,அக்.13-

திருவொற்றியூர் மேற்கு பகுதிச் செயலாளர் வை.ம. அருள்தாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டம் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் BC, BLA&2,BLC, BDA, BYA ஆலோசனைக் கூட்டம் 13.10.25 இன்று மாலை 5:00 மணியளவில் திருவொற்றியூர் அஜாக்ஸ் வி. கே. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல். ஏ. பங்கேற்று எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ , தொகுதி பார்வையாளர் எஸ். மோகன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், மாவட்டப்பொருளாளர் எம்.ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்க இருக்கிறார்கள்.

இந்த ஆனோசனைக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளிக்காக நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் பாக முகவர் மற்றும் BLC, BDA,BYA ஆகியோருக்கான பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இந்த நிகழ்விற்கு பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகி கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதி கள்,

சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட,பகுதி, வட்ட கழக கழக நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், BLC, BDA, BYA மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பரிதி இளம் சுருதியின் எம்.சி. தந்தை

# முன்னாள் அமைச்சர் பரிதிஇளம்வழுதி 7-ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது!

சென்னை, அக்.13-

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.கழக முன்னாள் செயலாளர் மறைந்தும் கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதியின் தந்தை, முன்னாள் கழகத் துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம் வழுதி அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பரிதி இளம்வழுதி நினைவு நற்பணி மன்றம் சார்பில், அயனாவரம் சபாபதி தெருவில் இன்று (13.10.2025) பகல் 12.00 மணி அளவில் பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட உள்ளது.



இதில் ஆ.ச.நெடுஞ்செழியன், எம். ஜோதிமணி, எல். வினோத்ராஜ், எஸ்.எம்.முகமது இப்ராஹிம், எஸ்.கே. பிரகதீஸ்வர்,

எம். விஜயகுமார், பி. பிரமோத், எஸ்.ரஜினிகாத்து, இ.பால் ஜோஷ்வா, டி. ராகுல்குமார், சி. பிரேம்குமார், எம்.அருண், என். நவின், பி.ஒய். சக்தி, சி.ஆர். சரண், T.D. ஆகாஷ், டி. பயாஸ், எ. நவின், ரகி புல்லா, எஸ்.ஜெயலட்சுமி எஸ்.எம்.ரவிக்குமார் கே. வெங்கடேசன் கே. காமேஷ் எம்.தனுஷ் குமார், பி.டி. கிரன்பாபு, நரேஷ் குமார், முனாப், சரவணன், குடியரசு, அஜித், மாறன், ஆகாஷ், சதிஷ், அருண், இளமாறன்,மொரை, ராகுல், டைட்டஸ், வெங்கட், வினோராஜ், வாசு. சிவனேசன், புருனேஷ், எம்.விக்னேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படியும், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களுடன் 2026சட்ட மன்ற தேர்தல் சம்மந்தம்மாக,கருத்துகள் பரிமாற்றம் மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் க.செல்வம் எம்.பி., ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேரன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொது மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி மற்றும் இளைஞரணி பயிற்சி பாசறை கூட்டம் நடத்துவது மற்றும் இளைஞரணி பணிகள் குறித்து 143வது வார்டு அலுவலகத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ச.சங்கர் கணேஷ் எம்.சி.ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் பூ. நவராஜ்,பிரசாந்த், யோகேஸ்வரன், சாந்தகுமார், யுவபிரசாத், அன்பரசன்,பா. மணிகண்டன், விக்னேஷ்,எம். இசக்கிபாண்டி,எம். தனஞ்ஜெயம், ஏ. கோபி,எம்.சுப்பு உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மகளிர் அணி

# திருப்பூர் மத்திய மாவட்டம்

## திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர மகளிர் அணி அமைப்பாளராக உள்ள சா. மகேஸ்வரி அவர்களுக்கு பதிலாக திருமதி. **மு. விஜயா** (1, மாரியம்மன் கோவில் வீதி, முருகம்பாளையம், திருப்பூர் 641604.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநகர மகளிர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 11.10.2025

**ஜெ.ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்டத்தில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏ. டி.சி.விஜயன் இல்லத்தில் பாக முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமை தாங்கி ஆலோசனை வழங்கினார். டி.சி.வி.ராஜகுமாரி விஜயன் முன்னிலை வகித்தார். 8வது வட்டக் கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். இதில் டி.டி.எம்.பாபு, வை.நந்திவர்மன், அபூபக்கர் சித்திக், வி.ஆர்.சீனிவாசன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.